இருக்கலாமே தவிர, அவர்களுக்கு எந்தவிதக் குறைபாடும் இருக்காது என்று சொல்லி, இந்தப் பொருள்பற்றி இன்னும் விரிவாக விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி, இதற்காக, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

4. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) கவன ஈர்ப்புக்கு மற்றொரு அமைச்சர் பதிலளிப்பது.

திரு. என். சங்கரய்யா: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மாண்புமிகு வனத்துறை அமைச்சருக்குத்தான் கவன ஈர்ப்பு நோட்டீஸ் கொடுத்துள்ளார்கள். ஆனால், தொழிலாளர் நல இலாகா அமைச்சர் பதில் அளிப்பார் என்று நிகழ்ச்சி நிரலில் வந்திருக்கிறது. இது சட்டப்படி சரிதானா என்று கேட்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்னை போனஸ் பிரச்னை. போனஸ் பிரச்னைக்குத் தொழிலாளர் நல இலாகா அமைச்சர் பதில் சொல்லலாமே, அது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர் என்பதால்;

திரு. என். சங்கரய்யா: எந்த ஒரு அமைச்சருக்கும் உறுப்பினர்கள் கொடுக்கலாம் என்றுதான் விதிகளில் இருக்கிறது. அந்த அடிப்படையிலே, வனத் தொழில். வன இலாகா அமைச்சருக்கு உட்பட்டது. அதுவும் இந்த கன்னியாகுமரி மாவட்ட ரப்பர் பிளான்டேஷன்ஸ் அவருடைய பொறுப்பில் வருகிறது. ஆகவே, அதனுடைய வளர்ச்சியிலே அந்த அமைச்சருக்கு அக்கறை இருக்கிறது என்ற காரணத்தினால் அதிலே ஏற்பட்டிருக்கிற ஒரு பிரச்னை என்ற வகையில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வனத்துறை அமைச்சருக்கு மரம் வளர்ப்பதிலே அக்கறை. போனஸ் பிரச்னையிலே தொழிலாளர் நல அமைச்சருக்கு அக்கறை. உறுப்பினர்கள் எந்த அமைச்சரை வேண்டுமானாலும் கேள்வி கேட்கலாம். ஆனால் எந்த அமைச்சர் பதில் சொல்ல வேண்டுமோ, அந்த இலாகா அமைச்சருக்கு அது அனுப்பப்பட்டு, அவர்கள் பதில் சொல்கிறார்கள். இதுதான் என்னுடைய வேலை. அந்த வகையிலே, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் பதில் சொல்வார்கள்.

திரு. துரைமுருகன்: ஒரு தொழிலாளிக்கு பசிக்கிறது என்றால் பசி என்றால், அதற்குச் சோறு கொடுக்க வேண்டும். சோறு

என்று சொன்னால் உணவு அமைச்சர். ஆகவே, உணவு அமைச்சருக்கு அனுப்புவோம் என்று உணவு அமைச்சருக்கு அனுப்புவதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 54-வது விதியின் கீழ் கவன ஈர்ப்பு என்ன என்று பாருங்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் 1-4-1982 முதல் அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் போனஸ் கோரி செய்து வரும் வேலை நிறுத்தம் குறித்து. வேலை நிறுத்தம், போனஸ், இவை இரண்டும் தொழிலாளர் நல இலாகாவைச் சேர்ந்தது.

திரு. என். சங்கரய்யா: அரசினுடைய ரப்பர் தோட்டம் இது. அந்த ரப்பர் தோட்டத்தை நிர்வகிக்கும் இலாகாவிற்குத் தலைமை வகிக்கக் கூடியவர் வனத்துறை அமைச்சர். ஆகவே அவர் பதில் சொல்வது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வனத்துறை அமைச்சர் தலைவராக இருக்கலாம். தொழிலாளர் சம்பந்தப்பட்டது எதுவாக இருந்தாலும், தொழிலாளர் நல அமைச்சருக்கு விளக்கம் சொல்ல வேண்டிய பொறுப்பு இருக்கிறது.

திரு. என். சங்கரய்யா, தாங்கள் ரூலிங் கொடுப்பதற்கு முன்னாலே ஒன்றைக் கவனிக்க வேண்டும். விதிகளிலே அப்படி இல்லை. நாளைக்குப் பல முன் உதாரணங்கள் ஏற்படக்கூடிய பிரச்னை இது. நாங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அவருடைய கவனத்தை ஈர்த்து ஒரு முன்னறிவிப்பு கொடுக்கிறோம். அவரிடமிருந்து பதில் வரும் என்று எதிர்பார்த்து. கேள்விகள் தயாரித்துக்கொண்டு வருகிறோம். அப்படி இருக்கும் போது இப்படி ஒரு மாறுதல் வரும்போது, அது எப்படி முறை என்றுதான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதிகளை எல்லாம் பார்த்து விட்டு நான் சொல்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: இப்பொழுது இதை ஒத்தி வைக்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஒத்திவைக்க வேண்டியதில்லை. இருக்கிற சூழ்நிலையிலே, போனஸ். வேலை நிறுத்தம் அரசுத் துறையாக இருந்தாலும் சரி, மற்ற துறைகளாக இருந்தாலும் சரி, தொழிலாளர் நலத் துறையிலே வரும். பொறுப்பு இருந்தால், அந்த அமைச்சரே வந்து பதில் சொல்வார். அவருடைய இலாகாவின் கீழ் வராமல், வேறு இலாகாவின் பொறுப்பில் வருவதால், இன்னொரு இலாகா அமைச்சரைக் கூப்பிட்டுப் பதில் சொல்லச் சொல்லியிருக்கிறாரே தவிர. இதில் ஒன்றும் புதுமை இல்லை. நாடாளுமன்றத்திலே. சட்டமன்றங்களிலே, முறையாக, இயற்கையாக நடப்பதுதான்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: போலீசைப் பற்றிக் கேட்டால், முதலமைச்சருக்கு அனுப்புவீர்களா அல்லது தொழிலாளர் நலத் துறை அமைச்சரிடம் கேட்பீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொழிலாளர் நலத்துறை அமைச்சர் விடை அளிக்கத் தயாராக இருக்கிறார். அவர் சொல்கிற விடையை நீங்கள் கேளுங்கள். அதற்குப் பிறகு அது சரியாக இருக்கிறதா, இல்லையா என்று நீங்கள் பாருங்கள்.

திரு. என். சங்கரய்யா: சட்ட வியாக்கியானத்தைப் பற்றி நான கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட வினக்கத்தினை நான் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பொ. விஜய ராகவன்; ஜெ. ஹேமச்சந்திரன், டி. மணி, எம். செல்லமுத்து, ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. துரைமுருகன்: எங்கள் கட்சியின் சார்பிலே நான் அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் திருவாளர்கள் விஜய ராகவன், ஹேமச்சந்திரன், மணி, செல்லமுத்து ஆகிய நான்கு பேர்கள் கொடுத்திருக்கிறார்கள். திரு. துரைமுருகன் அவர்கள் இதை அஜெண்டாவிலே சேர்த்த பிறகு கொடுத்திருக்கிறார்கள்.

திரு. துரைமுருகன்: அஜெண்டாவிலே சேர்த்தாகி விட்டது என்று போர்டா போடுகிறார்கள். நான் நேற்று கொடுத்திருக் கிறேன். அதை எடுத்துக்கொள்ள வேண்டியதுதானே; இல்லை யென்றால் புக்கிங் க்ளோஸ் என்று போடுங்கள்.

Excuse me. yesterday I gave a notice to the Speakers Office.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் நேற்று கொடுத்தீர் கள். அது சேர்த்துக் கொள்ளப்படவில்லை.